Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், ஏப்ரல் 24, 2025 | இதழ் 11

## பயங்கரவாத தாக்குதலுக்கு கண்டனம்: - 35 ஆண்டுகளுக்குப் பின் காஷ்மீரில் முழு அடைப்பு போராட்டம்

சென்னை, 24 ஏப்ரல் 2025: காஷ்மீரில் நேற்று பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் , அம்மாநிலத்தில் இன்று முழு அடைப்பு போராட்டம் நடக்கிறது. 35 ஆண்டுகளுக்கு பின்பு முதல் முறையாக முழு கடையடைப்பு போராட்டம் இன்று நடப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஷ்மீரின் பெஹல்காமில் நேற்று பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலுக்கு காஷ்மீரில் அனைத்து கட்சிகளும் கண்டனம் தெரிவித்து உள்ளன.

இந்த தாக்குதலைக் கண்டித்து பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக - மத அமைப்புகள், வணிக அமைப்புகள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் காஷ்மீரில் முழு கடை யடைப்புக்கு இன்று அழைப்பு விடுத்திருந்தன.

இதனையடுத்து பயங்கரவாத தாக்குதலைக் கண்டித்து



காஷ்மீரில் இன்று கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது. இதனால் அனைத்து கடைகளும், வர்த்தக நிறுவனங்களும் அடைக்கப்பட்டிருந்தன.

இதனால் ஆள் நடமாட்டம் இன்றி முக்கிய சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன. மாநிலம் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப் பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் ஆளும் தேசிய மாநாடு கட்சி, மக்கள் ஜனநாயக கட்சி, மக்கள் மாநாட்டு கட்சி மற்றும் அப்னி கட்சி போன்ற கட்சிகள் முழு அடைப்பு போராட்டத்துக்கு ஆதரவளித்துள்ளன.

அதேபோல், ஹூரியத் மாநாட்டின் தலைவரான உமர் பரூக் தலைமையிலான பல்வேறு மத அமைப்புகளின் கூட்டமைப்பான முதாஹிதா மஜ்லிஸ் உலேமா, "காஷ்மீர் மக்கள் முழு அடைப்பு போராட்டத்தில் பங்கேற்று பயங்கரவாத தாக்குதலுக்கான தங்களின் எதிர்ப்பை பதிவு செய்யவேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

வர்த்தக சங்கத்தினர் கூறுகையில், நேற்று மனதை வலிக்கும் வகையில் நடந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் போராட்டம் நடக்கிறது. மனித நேயத்திற்கு எதிரான மரணம் நிகழ்ந்துள்ளது. இந்த சம்பவத்திற்கு எதிராக உள்ளோம் என்றனர்.

தலைநகர் ஸ்ரீநகரில் பெரும்பாலான கடைகளும், பெட்ரோல் பங்குகளும் மூடப்பட்டிருந்தன.

நகர் முழுவதும் அத்தியாவசிய பொருள்களுக்கான கடைகள் மட்டுமே திறந்திருந்தன. பொதுப் போக்குவரத்து இயக்கப்பட வில்லை. காஷ்மீர் முழுவதும் தனியார் பள்ளிகளும் இயங்கவில்லை.

பிற மாவட்டத் தலைநகரங் களிலும் கடையடைப்புப் போராட்டம் நடந்தது. அதேபோல் பல்வேறு இடங்களில் மக்கள் அமைதியான முறையில் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

அப்போது பெஹல்காம் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, அப்பாவி பொது மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப் பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

## பிரதமரின் சவுதி அரேபியா பயணத்தால் ஏற்பட்டுள்ள பலன்கள் குறித்த பட்டியல்

சென்னை, 24 ஏப்ரல் 2025: 1. பாதுகாப்பு கூட்டாண்மைக் குழுமம்

இந்தியா-சவுதி அரேபியா பாதுகாப்பு கூட்டாண்மைக் குழுமத்தின் இரண்டாவது கூட்டம் பிரதமர் திரு நரேந்திர மோதி மற்றும் சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும், பிரதமருமான திரு முகமது பின் சல்மான் ஆகியோரது கூட்டுத் தலைமையில் ஏப்ரல் 22-ம் தேதி ஜெட்டாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அரசியல், பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, தொழில் நுட்பம், விவசாயம், கலாச்சாரம், மக்கள் தொடர்பு போன்ற பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இரு நாடுகளைச் சேர்ந்த துணைக் குழுக்கள் மற்றும் பணிக் குழுக்களின் பணிகள் குறித்தும் இந்தக் குழுமம் மதிப்பாய்வு செய்தது. கூட்டத்தின் இறுதியில், மேற்கொள்ளப்பட்ட குறிப்புகளில் இருநாட்டு தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

பாதுகாப்புத் துறையில் கூட்டுப் பயிற்சிகள், தொழில் நுட்பம் உட்பட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு போன்ற உறவுகள் கடந்த சில ஆண்டுகளில் வலுவடைந்துள்ளதைக் குறிக்கும் வகையில், பாதுகாப்புக்கான புதிய அமைச்சரவை கமிட்டியை நியமிக்க கூட்டுக் குழுமம் முடிவு செய்தது.

இரு நாடுகளுக்கும் இடையேயான கலாச்சாரம் மற்றும் மக்கள் தொடர்பு ஆகிய துறைகளில் பரஸ்பரம் நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், சுற்றுலா, கலாச்சார ஒத்துழைப்புக்கான புதிய அமைச்சரவை குழுவை உருவாக்குவது எனவும் இந்த கவுன்சில் முடிவு செய்தது.

இந்தியா-சவுதி அரேபியா இடையேயான கூட்டுக் குழுமத்தின் கீழ் நான்கு குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. அவை:

(1) அரசியல், தூதரக மற்றும் பாதுகாவல் ஒத்துழைப்புக் குழு.

(2) பாதுகாப்பு ஒத்துழைப்புக் குழு.

(3) பொருளாதாரம், எரிசக்தி, முதலீடு மற்றும் தொழில்நுட்பக் குழு.

(4) சுற்றுலா மற்றும் கலாச்சார ஒத்துழைப்புக் குழு.

2. முதலீட்டுக்கான உயர்மட்ட பணிக்குழு

எரிசக்தி, பெட்ரோ கெமிக்கல்ஸ், உள் கட்டமைப்பு, தொழில் நுட்பம், நிதிசார் தொழில் நுட்பம், டிஜிட்டல் உள்கட்டமைப்பு, தொலைத் தொடர்பு, மருந்துகள், உற்பத்தி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியாவில் 100 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு முதலீடு செய்யவும், சவுதி அரேபியா முடிவு செய்துள்ளது.

இந்தியாவில் இரண்டு சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவுவதற்கு இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன. வரிவிதிப்பில் முதலீட்டுக்கான உயர்மட்ட பணிக்குழு அடைந்துள்ள முன்னேற்றம் எதிர்காலத்தில் அதிக அளவிலான முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ஒப்பந்தங்களின் பட்டியல்:

விண்வெளி, சுகாதாரம், ஊக்கமருந்து தடுப்பு, போன்ற துறைகளில் பரஸ்பரம் இருநாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

சவுதி அஞ்சல் கழகம், இந்தியத் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் அஞ்சல் துறை ஆகியவற்றுக்கு இடையே தரைவழி அஞ்சல் மற்றும் பார்சல் போன்ற நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தமும் கையெழுத்தானது.

## தாக்குதல் சம்பவத்திற்கு காரணமான 4 பயங்கரவாதிகளின் வரைபடங்கள் வெளியீடு

சென்னை, 24 ஏப்ரல் 2025: காஷ்மீரின் பெஹல்காமில் நடந்த தாக்குதல் சம்பவத்திற்கு காரணமானவர்கள் என சந்தேகிக்கப்படும் பயங்கரவாதிகள் 4 பேரின் புனைப் படங்களை பாதுகாப்பு அமைப்புகள் வெளியிட்டு உள்ளன. அதில் 2 பேர் வெளிநாட்டினர் என தெரியவந்துள்ளது.

காஷ்மீரின் பெஹல்காம் மாவட்டத்தில் நேற்று நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பாகிஸ்தான் ஆதரவு பெற்ற லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் ஆதரவு பெற்ற கிளை அமைப்பு ஒன்று பொறுப்பு ஏற்றுள்ளது.

இந்த அமைப்பின் மூத்த தளபதி சைபுல்லா கசூரி தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டுள்ளதாக புலனாய்வு துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து அப்பகுதி ராணுவம் மற்றும் போலீசாரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு உள்ளது.

இந்நிலையில் பயங்கரவாத தாக்குதல் நடத்தியவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களின் புகைப் படங்களை போலீசார் வெளியிட்டு உள்ளனர். தாக்குதலில் காயமடைந் தவர்கள் மற்றும் நேரில் பார்த்தவர்கள் அளித்த



தகவல் அடிப்படையில் பயங்கரவாதிகளின் உருவப்படம் வரையப் பட்டு இருந்தது.

இதன் அடிப் படையில் தாக்குதல் நடத்தி யவர்கள் ஆசிப் பவுஜி, சுலைமான் ஷா, அபுத் தல்ஹா என போலீசார் சந்தேகம் அடைந்துள்ளனர்.

மொத்தம் 6 பேர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் நிலையில், 3 பேரின் விவரங்கள் தற்போது வெளியாகி உள்ளது.

இந்நிலையில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் என சந்தேகிக்கப்படும் நான்கு பேரின் புகைப் படங்களை பாதுகாப்புப் படையினர் வெளியிட்டு உள்ளனர். இதில் 2 பேர் வெளிநாட்டினராக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

## ஜம்மு காஷ்மீரில் ஊடுருவ முயன்ற 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

சென்னை, 24 ஏப்ரல் 2025: ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லாவின் உரி நாலாவில் நடந்த என்கவுன்டரில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

ஜம்மு-காஷ்மீரின் பெஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் பயங்கரவாதிகள் நேற்று துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதற்கு அடுத்த நாளான இன்று காலை இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதிகள் 2 பேரை சுட்டுக் கொன்றதாக இந்திய ராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்திய ராணுவத்தின் சினார் கார்ப்ஸ் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதில் இரண்டு பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாரமுல்லாவில்



நடந்து வரும் அதிரடி நடவடிக்கையில் பயங்கரவாதிகளின் ஊடுருவல் முயற்சி முறியடிக்கப்பட்டது" எனப் பதிவிட்டுள்ளது. மேலும், பயங்கரவாதிகளிடம் இருந்து ஏராளமான ஆயுதங்கள், வெடிமருந்துப் பொருள்கள் உள்ளிட்டவை கைப்பற்றப் பட்டுள்ளன.

யூேடுதல் வேட்டை தொடர்ந்து நடந்து வருவதாகவும் ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஊட்டியில் துணைவேந்தர்கள் வருடாந்திர மாநாட்டுக்கு குடியரசுத் துணைத்தலைவர் தலைமை வகிக்கிறார்

சென்னை, 24 ஏப்ரல் 2025: குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர், டாக்டர் சுதேஷ் தன்கர் ஆகியோர் மூன்று நாள் பயணமாக தமிழ் நாட்டுக்கு வரவுள்ளனர்.

இந்தப் பயணத்தின் போது, 2025 ஏப்ரல் 25 அன்று ஊட்டியில் நடைபெறும் துணை வேந்தர்களின் வருடாந்திர மாநாட்டில் குடியரசுத் துணைத் தலைவர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க உள்ளார்.

2025 ஏப்ரல் 26 அன்று, திரு ஜக்தீப் தன்கர் ஊட்டியில் உள்ள முத்தநாடு மந்து தோடர் கோயிலுக்குச் செல்ல உள்ளார்.

அதைத் தொடர்ந்து, 27.04.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று கோவையில் உள்ள தமிழ்நாடு



வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே அவர் உரையாற்றுகிறார்.

## உலக முஸ்லிம் லீக் அமைப்பின் பொதுச் செயலாளர் பிரதமரைச் சந்தித்தார்

சென்னை, 24 ஏப்ரல் 2025: முஸ்லிம் உலக லீக்கின் பொதுச் செயலாளர் ஷேக் டாக்டர் முகமது பின் அப்துல்கரீம் அல் இசா இன்று ஜெட்டாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடியைச் சந்தித்தார்.

ஜம்மு-காஷ்மீரில் நடந்த கொடூரமான பயங்கரவாத தாக்குதலுக்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்ததுடன், கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார். 2023 ஜூலையில் புதுதில்லியில் பொதுச் செயலாளருடன் நடத்திய சந்திப்பை பிரதமர் நினைவு கூர்ந்தார்.

சகிப்புத்தன்மை மற்றும் விழுமியங்களை ஊக்குவிப்பதிலும், அமைதியை ஆதரிப்பதிலும், சமூக நல்லிணக்கத்தை முன்னெடுப்பதிலும் முஸ்லிம் உலக லீக்கின் பங்கை பிரதமர் பாராட்டினார்.

இந்தியாவின் பழமையான தத்துவமான உலகம் ஒரே குடும்பம் என்பதை நினைவு கூர்ந்த பிரதமர், இந்தியா பல கலாச்சாரம், பல மொழி, பல இனங்கள், பல மதங்களைக் கொண்ட சமுதாயம் என்றும், வேற்றுமையில் ஒற்றுமையைக் கொண்டாடுகிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் பன்முகத்தன்மை, அதன் துடிப்பான சமூகம் மதிப்புமிக்க பலமாகும் என்று அவர் கூறினார். தீவிரவாதம் மற்றும் வன்முறைக்கு எதிரான உலக முஸ்லிம் லீக்கின் உறுதியான நிலைப்பாட்டை அவர் பாராட்டினார்.

சவுதி அரேபியாவுடனான உறவுக்கு இந்தியா அதிக முக்கியத்துவம் அளித்து வருவதைச் சுட்டிக் காட்டிய பிரதமர், இப்போது பல்வேறு களங்களில் நீடித்த ஒத்துழைப்பாக இது உருவெடுத்துள்ளது என்றார். நெருங்கிய சமூக-கலாச்சார உறவுகள் இந்த ஒத்துழைப்பின் முக்கிய அம்சமாக அமைகின்றன எனப் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

# இந்தியா அனைத்து சிசிடிவி தயாரிப்புகளுக்கும் எஸ்டிக்யுசி சான்றிதழை கட்டாயமாக்கியதால், ஸ்பார்ஷ் சிசிடிவி முன்னணியில் உள்ளது

சென்னை 24, ஏப்ரல் 2025: சிசிடிவி கேமராக்கள் மற்றும் மின்னணு பாதுகாப்பு தீர்வுகளின் முன்னோடி இந்திய உற்பத்தியாளரான ஸ்பார்ஷ், ஏப்ரல் 9, 2025 அன்று அரசாங்க விதிமுறைகள் அமலாக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதன் சிசிடிவி தயாரிப்புகளின் மிக விரிவான வரம்பிற்கு எஸ்டிக்யுசி (தரப்படுத்தல் சோதனை மற்றும் தர சான்றிதழ்) அடைந்த முதல் இந்திய நிறுவனமாக இன்று இந்திய சந்தையில் தொடர்ந்து தலைமை தாங்குவதாக அறிவித்துள்ளது. இந்தியாவில் விற்கப்படும் அனைத்து ஐபி சிசிடிவி கேமராக்களுக்கும் எஸ்டிக்யுசி சான்றிதழை இப்போது கட்டாயமாக்குகிறது.



இந்த குறிப்பிடத்தக்க சாதனை, தரம், பாதுகாப்பு மற்றும் "ஆத்மநிர்பர் பாரத்" முயற்சிக்கான ஸ்பார்ஷின் ஆரம்பகால உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. புதிய விதிமுறைகள் இப்போது அனைத்து சிசிடிவி கேமராக்களும் சட்டப்பூர்வ விற்பனைக்கு எஸ்டிக்யுசி சான்றிதழைப் பெற வேண்டும் என்று கோரினாலும், ஸ்பார்ஷின் முன்னெச்சரிக்கை அணுகுமுறை, அதன் கூட்டாளர்களும் வாடிக்கையாளர்களும் எந்த இடையூறும் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்து, பரந்த அளவிலான சான்றளிக்கப்பட்ட தீர்வுகளை வழங்கும் முதல் நிறுவனமாக அதை நிலைநிறுத்தியுள்ளது.

"எங்கள் தயாரிப்பு தொகுப்பின் விரிவான ஸ்பெக்ட்ரமுக்கு மதிப்புமிக்க எஸ்டிக்யுசி சான்றிதழைப் பெற்ற உலகின் முதல் சிசிடிவி உற்பத்தியாளர் என்பதில் ஸ்பார்ஷ் பெருமை கொள்கிறது," என்று ஸ்பார்ஷ் சிசிடிவியின் நிர்வாக இயக்குநர் திரு. சஞ்சீவ் சேகல் கூறினார். "இந்த ஆரம்பகால சான்றிதழ், உள்நாட்டு வடிவமைப்பு, கடுமையான உற்பத்தி மற்றும் மிக உயர்ந்த தேசிய தரநிலைகளை பூர்த்தி செய்யும் பாதுகாப் பான, உயர்தர கண்காணிப்பு தீர்வுகளை வழங்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. இந்தத் துறை இந்த முக்கியமான புதிய விதிமுறைகளுக்கு ஏற்ப மாறும் போது, ஸ்பார்ஷ் இந்திய சந்தைக்கு உடனடியாகக் கிடைக்கக் கூடிய பரந்த அளவிலான சான்றளிக்கப்பட்ட தயாரிப்புகளை வழங்குகிறது."

அதன் சிசிடிவி தயாரிப்புகளின் பரந்த வரம்பிற்கு எஸ்டிக்யுசி சான்றிதழைப் பெறுவதில் ஸ்பார்ஷின் சாதனை, வணிகங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தங்கள் பாதுகாப்புத் தேவைகளுக்கு ஸ்பார்ஷை நம்பிக்கையுடன் தேர்வு செய்ய முடியும் என்பதை உறுதி செய்கிறது, அவர்கள் ஒரு முன்னோடி இந்திய உற்பத்தியாளரிடமிருந்து இணக்கமான மற்றும் நம்பகமான அமைப்புகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிந்து கொள்கிறார்கள். இந்த விரிவான சான்றிதழில் பல்வேறு பயன்பாடுகள் மற்றும் பிரிவுகளுக்கான பரந்த அளவிலான மிறி கேமராக்கள் அடங்கும். இன்றைய புதிய ஒழுங்குமுறை நிலப்பரப்பில் இது மிகவும் முக்கியமானது, அங்கு பழைய சான்றிதழைக் கொண்ட கேமராக்கள் இனி கார்ப்பரேட் வாடிக்கையாளர்களுக்கு, அரசாங்கத்திற்கு அல்லது சில்லறை வாடிக்கையாளர்களுக்கு விற்பனைக்கு தகுதியற்றவை.

முக்கிய சிறப்பம்சங்கள்:

கட்டாய ஒழுங்குமுறை அமலில் உள்ளது: ஏப்ரல் 9, 2025 முதல், இந்தியாவில் விற்கப்படும் அனைத்து சிசிடிவி கேமராக்களும் எஸ்டிக்யுசி சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஸ்பார்ஷ் சிசிடிவி முதலில் பரந்த சான்றிதழைப் பெறுகிறது: ஸ்பார்ஷ் அதன் தயாரிப்பு இலாகாவின் மிக விரிவான வரம்பிற்கு எஸ்டிக்யுசி சான்றிதழைப் பெற்ற உலகின் முதல் சிசிடிவி உற்பத்தியாளர் ஆகும்.

தொடர்ச்சியான கிடைக்கும் தன்மையை உறுதி செய்தல்: ஸ்பார்ஷின் ஆரம்பகால சான்றிதழ் பரந்த அளவிலான இணக்கமான சிசிடிவி தீர்வுகளின் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்கிறது.

தேசிய தரநிலைகளுக்கான அர்ப்பணிப்பு: இந்திய அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கடுமையான பாதுகாப்பு மற்றும் தரத் தரங்களை பூர்த்தி செய்வதற்கும் அவற்றை மீறுவதற்கும் ஸ்பார்ஷின் அர்ப்பணிப்பை இந்த சாதனை எடுத்துக்காட்டுகிறது.

"இந்தியாவில் தயாரிக்கப்பட்டது" தலைமைத்துவம்: இந்த குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடைவதற்கான அதன் திறனில் ஸ்பார்ஷின் உள்நாட்டு உற்பத்தி திறன்கள் முக்கிய பங்கு வகித்துள்ளன.

இந்த ஒழுங்குமுறை மாற்றம் கண்காணிப்புத் துறைக்குள் தேசிய பாதுகாப்பு மற்றும் தரவு பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான இந்திய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறது. இது இந்தியாவின் பாதுகாப்பிற்கான அணுகுமுறையில் ஒரு படி மாற்றத்தைக் குறிக்கிறது - நம்பிக்கை மற்றும் தரத்தால் வகைப்படுத்தப்படுகிறது. எஸ்டிக்யுசி இன் இஆர் ஐஓடிஎஸ்சிஎஸ் விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தவுடன், சந்தை இணங்காத கண்காணிப்பு கேமராக்களுக்கான கதவுகளை மூடிவிட்டது. ஸ்பார்ஷின் ஆரம்பகால சாதனை மற்றும் பரந்த சான்றிதழ், இந்தியாவில் இணக்கமான மற்றும் உயர்தர பாதுகாப்பு தீர்வுகளைத் தேடும் நிறுவனங்களுக்கு ஒரு முன்னணி மற்றும் நம்பகமான கூட்டாளியாக அதை நிலை நிறுத்துகிறது.

ஸ்பார்ஷ் சிசிடிவி பற்றி

2002 இல் நிறுவப்பட்ட ஸ்பார்ஷ், மேம்பட்ட சிசிடிவி கேமராக்கள் மற்றும் மின்னணு பாதுகாப்பு தீர்வுகளில் நிபுணத்துவம் பெற்ற ஒரு முன்னணி இந்திய உற்பத்தியாளர். புதுமை மற்றும் "ஆத்மநிர்பர் பாரத்" ஆகியவற்றில் உறுதியாக உள்ள ஸ்பார்ஷ், பரந்த அளவிலான உயர்தர, பாதுகாப்பான கண்காணிப்பு தயாரிப்புகளை வடிவமைத்து, உருவாக்கி, உற்பத்தி செய்கிறது, இப்போது அதன் ஆரம்ப மற்றும் விரிவான எஸ்டிக்யுசி சான்றிதழால் சரிபார்க்கப்படுகிறது. இந்தியாவில் மின்னணு வீடியோ கண்காணிப்பு உபகரணங்களை தயாரிப்பதில் ஸ்பார்ஷ் ஒரு முன்னோடி மற்றும் முன்னணி நிறுவனமாகும். 2008 ஆம் ஆண்டில் இந்தியாவில் சிசிடிவி கேமராக்களை தயாரித்த இந்தியாவின் முதல் நிறுவனமாக இருப்பதன் மூலம், இப்போது உலகளாவிய தடம் பதித்து இந்திய பாதுகாப்பு சந்தையில் புரட்சியை ஏற்படுத்தியது. ஸ்பார்ஷ் வீடியோ கண்காணிப்பு களத்தில் ஒரு புதுமைப்பித்தனாக இருந்து வருகிறது, முழுமையான வீடியோ கண்காணிப்பு தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை உருவாக்கி உற்பத்தி செய்கிறது.

ஸ்பார்ஷ் நிறுவனம் அடுத்த 3 ஆண்டுகளில் தனது உற்பத்தியை 10 மடங்குக்கு விரிவுபடுத்த உள்ளது. உத்தரகாண்ட் மாநிலம் காஷிபூரில் உள்ள எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி கிளஸ்டரில் முழுமையாக ஒருங்கிணைந்த உற்பத்தி வசதி அமைக்கப்பட உள்ளது. இது உலகின் மிகப்பெரிய எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி கிளஸ்டரில் ஒன்றாகும். தற்போது, ஸ்பார்ஷ் தயாரிப்புகள் 10க்கும் மேற்பட்ட நாடுகளில் கிடைக்கின்றன, மேலும் அந்த நிறுவனத்திற்கு அமெரிக்காவில் ஒரு சகோதர நிறுவனம் உள்ளது. கூடுதலாக, ஸ்பார்ஷ் இந்தியா முழுவதும் 150க்கும் மேற்பட்ட நகரங்களில் வலுவான இருப்பைக் கொண்டுள்ளது, 29 விற்பனை அலுவலகங்கள் மற்றும் 13 சேவை மையங்களைக் கொண்டுள்ளது.

# ஹெர்பாலைஃப் இந்தியா ஆனது ஸ்லீப் என்ஹான்ஸ் ஐ அறிமுகப்படுத்தியுள்ளது

சென்னை 24, ஏப்ரல் 2025: முன்னனி ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு நிறுவனம், சமூகம் மற்றும் தளமான ஹெர்பாலைஃப் இந்தியா ஆனது கெஃபைனற்ற மற்றும் தாவரத்திலிருந்து தயாரிக்கப்படுகின்ற, தூக்கத்தின் தரத்தை மேம்படுத்துவதாக நிரூபிக்கப்பட்ட மருத்துவரீதியாக ஆராயப்பட்ட உட்பொருள் கொண்ட ஸ்லீப் என்ஹான்ஸ் ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அறிமுகமானது பரபரப்பான வாழ்க்கை பாணிகள், டிஜிட்டல் கவனசிதறல்கள் மற்றும் அதிகரித்து வரும் மன இறுக்க அளவுகளால் தூண்டப்பட்டு இந்தியாவில் தூக்க குறைபாடுகள் பெருகி வரும் வேளையில் வருகிறது.




இன்றைய அவசரகதியில் இயங்கும் உலகில் தரமான தூக்கம் என்பது இனியும் ஒரு ஆடம்பரமல்ல ஆனால் ஒரு தேவையாகும். இருந்தும் கனத்த வேலை பளு, அதிகரித்து வரும் ஸ்க்ரீன் நேரம் மற்றும் உயர்ந்து வரும் மன அழுத்த அளவுகள் ஆகியவற்றினால் மக்கள் பலர் தரமான தூக்கத்தை எட்டுவதற்கு போராடுகின்றனர். ஏறத்தாழ பாதி இந்தியர்கள் விழித்தெழுகையில் களைப்பாக உணருவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன மற்றும் படுக்கைக்கு முன்பான டிஜிட்டல் வெளிப்பாடு, தூக்கத்தின் தரத்தை மேலும் குறைக்கிறது. திறனுறு தூக்க தீர்வுகளுக்கான அதிகரித்து வரும் தேவையை இனம் கண்டு ஹெர்பாலைஃப், இந்தியா உறங்கும் தன்மையை மேம்படுத்த முனைந்துள்ளது. ஸ்லீப் என்ஹான்ஸ் ஆனது குறைந்தது 28 நாட்களுக்கு படுக்கைக்கு செல்ல 1 மணிநேரம் முன்பு எடுத்துக்கொண்டால் தூக்கத்தின் தரத்தை மேம்படுத்துவதாக நிரூபிக்கப்பட்ட நம்பகமான குங்குமப்பூ சாறான ஆஃப்ரானால் தயாரிக்கப்பட்டது.

ஸ்லீப் என்ஹான்ஸ் ஆனது உபரி சர்க்கரைகளையும் கெஃபைனையும் உட்சேர்க்காதது எனவே இது ஒருவரின் இரவு நேர வாடிக்கையில் ஒரு திறனுறு சேர்க்கையாகிறது. இது செம்பருத்தியின் மணத்தை கொண்டது மற்றும் தூக்கத்தின் தரம் மற்றும் விழித்தெழுந்த பின் மனநிலை ஆகியவற்றை மேம்படுத்துகிறது மற்றும் மன அமைதியுடன் விழித்தெழ உதவுகிறது என்று மருத்துவத்தின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட குங்குமப்பூவை கொண்டது.

"தூக்கம் என்பது வெறும் ஒய்வுதான் என்ற நிலை மாறி அது உடலையும் மனதையும் மீட்டமைக்கின்ற மற்றும் அவற்றிற்கு புத்துணர்ச்சி தருகின்ற ஒன்று என்ற நிலை தோன்றியுள்ளது. ஹெர்பாலைஃப் இந்தியாவில் பரிணாம வளர்ச்சியடைகின்ற நுகர்வோர் வாழ்க்கைபாணிகளுடன் இணங்குகின்ற ஙிர்வுகளில் நம்பிக்கை கொள்கிறோம். ஸ்லீப் என்ஹான்ஸ், தூக்கத்தின் தரத்தை

மேம்படுத்துகின்றது மற்றும் மன அமைதி உணர்ச்சியுடன் விழித்தெழ உதவுகின்றது என்று மருத்துவரீதியாக நிரூபிக்கப்பட்ட குங்குமப்பூ சாற்றை கொண்டுள்ளது. தூக்கமின்மை ஒரு வாடிக்கையாகிவிட்ட இன்றைய அவசரகதியில் இயங்கும் உலகில் மக்கள் தங்கள் இரவுகளையும் உச்சக்கட்டமாக நல்வாழ்வையும் மீட்டெடுக்க உதவுவதற்கு நாங்கள் அர்பணித்துக்கொண்டுள்ளோம்," என்று ஹெர்பாலைஃப் இந்தியாவின் நிர்வாக இயக்குனரான அஜய் கன்னா விளக்கினார்.

தூக்க தொழில் துறையானது விஞ்ஞான-அடிப்படையிலான தீர்வுகளுக்கான தேவை அதிகரித்து வருவதை கண்ணுற்று வருகையில் ஹெர்பாலைஃப் ஆனது இந்த இயக்கத்தின் முன்னனியில் இடம்பெறவும் மற்றும் நுகர்வோர்கள் தூங்குவதை மட்டுமல்லாது தங்கள் தூக்கத்தின் தரத்தை மேம்படுத்துவதையும் உறுதிபடுத்தும் நிலையிலுள்ளது.

# துணைவேந்தர்கள் மாநாடு தொடர்பாக தமிழக அரசுடன் அதிகார மோதல் இல்லை: கவர்னர் மாளிகை விளக்கம்

சென்னை 24, ஏப்ரல் 2025: துணை வேந்தர்கள் மாநாடு தொடர்பாக தமிழக அரசுடன் எந்தவித அதிகார மோதலும் இல்லை என கவர்னர் மாளிகை விளக்கம் தெரிவித்துள்ளது.

வருகிற 25 முதல் 27 ந்தேதி வரை 3 நாட்கள் துணை வேந்தர்கள் மாநாடு, நீலகிரியில் உள்ள கவர்னர் மாளிகையில் நடைபெறும் என்று கவர்னர் மாளிகை அறிவித்துள்ளது.

இதில் துணை ஜனாதிபதி ஜகதீப் தன்கர் பங்கேற்பார் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் கவர்னர் மாளிகையின் இந்த அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில் கவர்னர் மாளிகை இதற்கு விளக்கம் அளித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நடத்தப்படும் துணை வேந்தர்கள் மாநாடு தொடர்பாக சில ஊடகங்கள் தவறான தகவல்களை வழங்கி வருகின்றன.

ஊடகங்களின் சில அறிக்கைகள், மாநில அரசுக்கும் கவர்னர் மாளிகைக்கும் இடையே அதிகாரப் போராட்டம் இருப்பது போல காட்டுகின்றன.

இந்த அறிக்கைகள் முற்றிலும் தவறானவை. உயர்கல்வி நிறுவனங்களின் துணை வேந்தர்கள் கலந்து கொள்ளும் மாநாடு 2022 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாடு கவர்னர் தலைமையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் தங்களுடைய கருத்துகளையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்கிறார்கள். மேலும் மாணவர்களுக்கு எழும் சவால்கள், வாய்ப்புகள், அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களின் வளர்ச்சி குறித்து ஆலோசித்து நமது மாநிலத்திற்கும் மாணவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் அந்தந்த நிறுவனங்களைத் தயார்படுத்துவதற்கான வழிமுறைகளை வகுக்கின்றனர்.

முன்னதாக தமிழ்நாட்டில் கல்வி நிறுவனங்கள் குறிப்பாக மாநில பல்கலைக் கழகங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி இருந்தன.

இந்த மாநாடுதான் அனைத்து கல்வி நிறுவனங்களும் ஒன்றுசேர்ந்து பணியாற்ற வழிவகுத்தன. ஒவ்வொரு ஆண்டும் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் பல மாதங்களுக்கு முன்பே தொடங்கி நடைபெறுகின்றன.

இந்த ஆண்டும் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் ஜனவரி மாதமே தொடங்கப் பட்டுவிட்டது.

இதற்கான ஏற்பாட்டிற்காக பல கூட்டங்கள் நடத்தப் பட்டன.

கற்றல், கற்பித்தல், புதுமை என கல்வி நிறுவனங்கள் சிறந்து விளங்கும் நோக்கில் நடைபெறும் இந்த துணைவேந்தர் மாநாட்டை அரசியல் நோக்கில் சில தவறான தகவல்கள் வருகின்றன.

சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புடன் தவறாக இணைத்து, கவர்னர் மாளிகைக்கும் மாநில அரசுக்கும் இடையிலான அதிகாரப் போராட்டமாக அதைக் காட்ட முயற்சித்து வருகின்றன. இந்தத் தகவல்கள் அவதூறானவை" என்று கூறப்பட்டுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்விசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சென்டிரல் இரயில் நிலையம் அருகில் தங்கி வரும் நபர்களுக்கிடையே அற்ப சச்சரவில் தாக்கிக் கொண்டதில் மருத்துவ சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டவர் மரணம். தாக்கியவர் கைது.

சென்னை 24, ஏப்ரல் 2025: கடந்த 21.04.2025 அன்று இரவு சென்டிரல் இரயில் நிலைய வளாகம் அருகிலுள்ள ஒரு ரெஸ்டாரண்ட் அருகில் சுமார் 55 வயது மதிக்கத்தக்க குப்பை சேகரிக்கும் நபரை, சென்டிரல் இரயில் நிலையத்தில் யாசகம் பெற்று வரும் செந்தில் (எ) குமார் என்பவர் தான் நடப்பதற்கு வைத்திருந்த அலுமினிய பைப்பால் தலையில் தாக்கியதில், மேற்கண்ட நபருக்கு தலையில் இரத்தக் காயம் ஏற்பட்டு, மயங்கி விழுந்து விட்டார்.

இரத்தக் காயமடைந்தவரை பொதுமக்களால் இராஜிவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள் நோயாளியாக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இச்சம்பவம் குறித்து அவ்விடத்தில் டீ விற்பனை செய்து வரும் சேப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த சேகர் என்பவர் கொடுத்த புகார் மீது ஜி-2 பெரியமேடு காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

ஜி-2 பெரியமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி செந்தில் (எ) குமார் இரயில் நிலையத்தில் யாசகம் பெற்று வருபவரை தேடி வந்தனர்.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேற்படி சுமார் 55 வயது நபர் சிகிச்சை பலனின்றி 22.04.2025 அன்று இரவு இறந்துவிட்டார். அதன் பேரில், இவ்வழக்கின் சட்டப்பிரிவு, கொலை பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டது.

ஜி-2 பெரியமேடு காவல் நிலைய தனிப்படையினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு எதிரி செந்தில் (எ) குமார், வ/45, த/பெ.சிவகுமார், சிறுவள்ளூர், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவரை நேற்று (23.04.2025) காலை கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

முதற்கட்ட விசாரணையில் இறந்துபோன நபர் அப்பகுதியில் பழைய பேப்பர் மற்றும் குப்பை சேகரிக்கும் நபர் என்பதும், எதிரி செந்தில் (எ) குமார் என்பவர் சென்டிரல் இரயில் நிலைய வளாகத்தில் யாசகம் பெற்று வருவதும், ஒரே பகுதியில் சுற்றி வருபவர்கள் என்பதும், இருவருக்கும் ஏற்பட்ட அற்ப சச்சரவு காரணமாக மது போதையில் சம்பவத்தன்று இரவு செந்தில் (எ) குமார் மேற்படி சுமார் 55 வயதுடைய விலாசம் தெரியாத குப்பை சேகரிக்கும் நபரை தாக்கியதும், அருகிலிருந்தவர்கள் காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து வந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்ததும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி செந்தில் (எ) குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளார்.

# கே.கே நகர் பகுதியில் குட்கா புகையிலை பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த நபர் கைது. 980 கிராம் குட்கா புகையிலை பொருட்கள் பறிமுதல்.

சென்னை 24, ஏப்ரல் 2025: சென்னை பெருநகர காவல், ஆர்-7 கே.கே நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் 22.04.2025 அன்று இரவு, கே.கே நகர், விஜயராகவபுரம், 3வது குறுக்கு தெருவில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த நபரை விசாரணை செய்து, அவரை சோதனை செய்ததில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், ஆர்-7 கே.கே நகர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சட்டவிரோதமாக குட்கா புகையிலை பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த சதிஷ்குமார், வ/23, த/பெ. கர்ணமூர்த்தி, ஏகாம்பரம் தெரு, சாலிகிராமம், சென்னை என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து ஹான்ஸ், கூலிப் உட்பட 980 கிராம் எடை கொண்ட குட்கா புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி சதிஷ்குமார் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# 'ஐ ஆம் சர்குலர்' காபி டேபிள் புத்தகத்தை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அறிமுகப்படுத்துகிறது

சென்னை 24, ஏப்ரல் 2025: இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், சுழற்சி பொருளாதாரத்திற்கான சர்வதேச கவுன்சில் (ஐசிசிஇ) தொகுத்து வழங்கிய 'ஐ ஆம் சர்குலர்' காபி டேபிள் புத்தக' வெளியீட்டை நடத்தியது. சுழற்சி பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதில் இந்தியாவின் புதுமையான உணர்வின் துடிப்பான கொண்டாட்டமாக இந்த புத்தகம் உள்ளது.

மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கூடுதல் செயலாளரும், தேசிய தகவல் மையத்தின் தலைமை இயக்குநருமான திரு அபிஷேக் சிங் தனது முக்கிய உரையில், நீடித்த நிலைத் தன்மைக்காக புதுமைகளை ஊக்குவிக்கும் சுற்றுச்சூழல் அமைப்புகளை செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

"இந்த முயற்சி பொறுப்பான வளர்ச்சி மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் பார்வையுடன் சூத்துப் போகிறது. 'ஐ ஆம் சர்குலர்' புத்தகம், சுழற்சி பொருளாதாரத் துறையில் இந்தியாவின் புத்தாக்கத் திறனின் பெருமைக்குரிய பிரதிநிதித்துவமாக விளங்குகிறது" என்று அவர் கூறினார்.

இந்த முயற்சியை வெற்றிகரமாக செயல்படுத்த உதவியதற்காக சர்வதேச சுழற்சி பொருளாதாரக் கவுன்சிலுக்கு அமைச்சகம் தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது என்று அவர் கூறினார்.

'ஐ ஆம் சர்குலர்' காபி டேபிள் புத்தகம், வெறும் வெளியீடு மட்டுமல்ல, இந்தியாவின் படைப்பாற்றலுக்கு ஒரு சான்று, பொறுப்பான புதுமைப் படைப்புகளுக்கான சமர்ப்பணம் மற்றும் நீடித்த, சுழற்சி சார்ந்த திர்காலத்தை உருவாக்குவதற்கான நமது தேசிய உறுதிப்பாட்டின் அடையாளமாகும் என்று அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் எஸ்இஆர்ஐ ஆலோசகர் டாக்டர் சந்தீப் சத்தர்ஜி, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் விஞ்ஞானி திரு சுரேந்திர கோதர்வால், ஐசிசிஇ ஆலோசகர் திரு பூரன் சந்திர பாண்டே, இயக்குநர் திரு ரவீந்தர் தஹியா, நிர்வாக இயக்குநர் திருமதி ஷாலினி கோயல் பல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஏழுகிணறு பகுதியில் ஆட்டோ நிறுத்துவதில் ஏற்பட்ட தகராறில் ஆட்டோ ஓட்டுநர் மற்றும் அவரது மனைவியை தாக்கிய மற்றொரு ஆட்டோ ஓட்டுநர் கைது.

சென்னை 24, ஏப்ரல் 2025: சென்னை, ஏழுகிணறு, புனித சேவியர் தெருவில் வசிக்கும் சசிகுமார், வ/42, த/பெ.குப்பன் என்பவர் ஆட்டோ ஓட்டி வருகிறார். சசிகுமார் கடந்த 21.04.2025 அன்று மாலை அவரது வீட்டின் அருகில் வழக்கமாக ஆட்டோ நிறுத்தும் இடத்தில் ஆட்டோவை நிறுத்த சென்றபோது, அங்கு வாஞ்சிநாதன் என்பவர் ஏற்கனவே அவரது ஆட்டோவை நிறுத்தி வைத்துள்ளதால், சசிக்குமார் ஆட்டோவை அங்கிருந்து எடுக்கும்படி வாஞ்சிநாதனிடம் கூறியுள்ளார். உடனே, வாஞ்சிநாதன், சசிகுமாரை தகாத வார்த்தைகளால் பேசி கையால் தாக்கியுள்ளார். மேலும் இதனை தடுக்க வந்த சசிகுமாரின் மனைவியையும் வாஞ்சிநாதன் கையால் தாக்கி துணியை பிடித்து இழுத்து அவதூறாக நடந்து கொலை மிரட்டல் விடுத்துச் சென்றார். காயமடைந்த சசிகுமார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து சி-3 ஏழுகிணறு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், போலீசார் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்எஸ் ஆக்ட்) மற்றும் தமிழ்நாடு பெண் வன்கொடுமை தடுப்புச் சட்டம் (தினன்பிஹெச்டபிள்யு ஆக்ட்) ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

சி-3 ஏழுகிணறு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட வாஞ்சிநாதன், வ/26, த/பெ.ஏழுமலை, மலையப்பன் தெரு, ஏழுகிணறு, சென்னை என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட வாஞ்சிநாதன் மீது ஏற்கனவே அடிதடி உட்பட 5 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி வாஞ்சிநாதன் விசாரணைக்குப் பின்னர் 22.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# டாஸ்மாக் ஊழியர்களுக்கு ரூ.2 ஆயிரம் ஊதிய உயர்வு: சட்டசபையில் அமைச்சர் செந்தில்பாலாஜி அறிவிப்பு

சென்னை 24, ஏப்ரல் 2025: அனைத்து டாஸ்மாக் ஊழியர்களுக்கும் ரூ. 2 ஆயிரம் தொகுப்பூதியம் உயர்வு செய்யப்படும் என்று அமைச்சர் செந்தில் பாலாஜி அறிவித்துள்ளார்.

சட்டசபையில், மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கையின்போது அமைச்சர் செந்தில் பாலாஜி புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு: * போதைப் பொருட்கள் பயன் படுத்துபவர்களை கண்டறிந்து விரைவான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குற்றப் புலனாய்வுத் துறையின் பயன்பாட்டுக்காக 50 கையடக்க வாய்வழி திரவ மருந்து சோதனை சாதனங்கள் வாங்கப்படும்.

* போதைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் சட்ட விரோத கடத்தலை ஒழிப்பதில் சிறப்பாக பணியாற்றும் 15 போலீசாருக்கு 'தமிழ்நாடு முதலமைச்சர் காவல்துறை பதக்கம்' என்ற சிறப்பு பதக்கம் வழங்கப்படும்.

* ஆன்லைன் போதைப் பொருட்கள் கடத்தல், 'டார்க் நெட்' சந்தைகள், கிளீப்டோ கரன்சி பரிவர்த்தனைகள் மற்றும் டிஜிட்டல் போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்களை எதிர்த்துப் போராட இணைய ஆய்வகம் அமைக்கப்படும்.

* தமிழ்நாட்டில் கள்ளச் சாராயம் அருந்துதல் மற்றும் போதைப் பொருட்கள் உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு வருவாய்த் துறை, காவல் துறை, போக்குவரத்துத் துறை, பள்ளிக்கல்வித் துறை மற்றும் உயர்கல்வித் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து மாவட்டந்தோறும் விழிப்புணர்வு பிரசாரங்கள் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

* தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 6,567 மேற்பார்வையாளர்கள், 14,636 விற்பனையாளர்கள் மற்றும் 2,426 உதவி விற்பனையாளர்கள், ஆக மொத்தம் 23,629 மதுபான சில்லரை விற்பனைக் கடைப் பணியாளர்கள் தொகுப் பூதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள்.

இவர்கள் அனைவருக்கும் தலா ரூ.2 ஆயிரம் 1.4.2025 (அதாவது இந்த மாதம் முதல்) முதல் மாதந்தோறும் உயர்த்தி வழங்கப்படும்.

இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.64.08 கோடி கூடுதல் செலவாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னை விமான நிலையம் - கிளாம்பாக்கம் மெட்ரோ ரெயில் திட்டம்: தமிழக அரசு அனுமதி

சென்னை 24, ஏப்ரல் 2025: சென்னை விமான நிலையத்தில் இருந்து கிளாம்பாக்கம் வரையிலான 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரெயில் விரிவாக்க திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்துக்கு ரூ.8,445 கோடி ஒதுகீடு செய்யப்பட்டது.

சென்னை மெட்ரோ ரயில் சேவை கடந்த 2015ல் தொடங்கப்பட்டது. படிப்படியாக சேவை நீட்டிக்கப்பட்டு, தற்போது விமான நிலையம் முதல் விம்கோ நகர் வரை, பரங்கிமலை முதல் சென்ட்ரல் வரை என 2 வழித்தடங்களில் 54 கி.மீ தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினமும் சராசரியாக 3 லட்சம் பேர் பயணம் செய்து வருகின்றனர். இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. சென்னை மெட்ரோ ரயில் திட்டம் கட்டம்-1-ல், விமான நிலையத்தில் இருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை மெட்ரோ ரயிலை சாலை மேம்பாலத்துடன் இணைத்து நீட்டிப்பதன் பரிந்துரைக்கான விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு அரசின் சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே. கோபாலரிடம் அரசு முதன்மை செயலாளரும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருமான மு.அ.சித்திக், கடந்த பிப்ரவரி மாதம் சமர்ப்பித்தார். மெட்ரோ ரயில் மற்றும் மேம்பாலச் சாலையின் ஒருங்கிணைந்த கட்டுமானத்தை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை திருத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின்படி, மெட்ரோ வழித்தடம் நிலை 2-ல் மற்றும் மேம்பாலச் சாலை நிலை 1-ல் முன்மொழியப்பட்டுள்ளது.

நிலம் கையகப்படுத்த அனுமதி: சென்னை விமான நிலையத்தில் இருந்து, பல்லாவரம், குரோம் பேட்டை, தாம்பரம், பெருங்களத்தூர், வண்டலூர் வழியாக கிளாம்பாக்கத்தை இணைக்கும் வகையில் மொத்தமாக 15.46 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ வழித்தடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து மெட்ரோ ரயில் மூலம் நேரடியாக கிளாம்பாக்கம் வரை செல்லலாம். இந்த திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும் சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகத்திற்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. சென்னை விமான நிலையத்திலிருந்து, பல்லாவரம், குரோம் பேட்டை, தாம்பரம், பெருங்களத்தூர், வண்டலூர் வழியாக கிளாம்பாக்கத்தை இணைக்கும் வகையில் இந்த மெட்ரோ ரெயில் திட்டத்தில் மொத்தம் 13 ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. இந்த மெட்ரோ விரிவாக்க திட்டத்திற்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ள நிலையில் இதற்கான நிதிப்பரிவுக்காக திட்ட அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் 7.39 லட்சம் புதிய சந்தாதாரர்கள் சேர்ப்பு

சென்னை 24, ஏப்ரல் 2025: தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு கடந்த பிப்ரவரி மாதத்துக்கான தற்காலிக சம்பள பட்டியல் தரவை வெளியிட்டு உள்ளது.

இது 16.10 லட்சம் உறுப்பினர்களின் நிகர சேர்க்கையை குறிப்பிடுகிறது. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது நிகர சம்பள பட்டியலில் பெயர் சேர்த்தல்களில் 3.99 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு கடந்த பிப்ரவரி மாதத்தில் சுமார் 7.39 லட்சம் புதிய சந்தாதாரர்களை சேர்த்துள்ளது.




புதிய சந்தாதாரர்களின் சேர்க்கைக்கு அதிகரித்து வரும் வேலை வாய்ப்புகள், பணியாளர் நலன்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் வெற்றிகரமான மக்கள் தொடர்பு திட்டங்கள் ஆகியவைதான் காரணம். மேற்கண்ட தகவல் பத்திரிகை தகவல் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

# திருமங்கலம் பகுதியில் திருமணம் செய்து கொள்வதாக கூறி வீட்டிற்கு அழைத்து பாலியல் வன்புணர்ச்சி செய்து ஏமாற்றிய நபர் கைது.



சென்னை 24, ஏப்ரல் 2025: சென்னை, எம்.ஜி.ஆர் நகர் பகுதியைச் சேர்ந்த 25 வயது பெண், திருமங்கலம் பகுதியில் உள்ள தேவாலயத்திற்கு சென்று வந்தபோது, சென்னை, ஜிஎஸ்டி அலுவலகத்தில் எக்சிக்யூட்டிவ் அசிஸ்டென்ட்-ஆக பணிபுரிந்து வரும் சதீஷ்குமார் என்பவர் அறிமுகமாகி, மேற்படி பெண்ணை காதலிப்பதாகவும், திருமணம் செய்து கொள்வதாகவும் ஆசை வார்த்தைகள் கூறி பேசி வந்த நிலையில், சதீஷ்குமார் தங்கியிருந்த திருமங்கலம் சிபிடபிள்யுடி குடியிருப்பிற்கு மேற்படி பெண்ணை அழைத்துச் சென்று பல முறை பாலியல் வன்புணர்ச்சி செய்த நிலையில், மேற்படி பெண் கர்ப்பமாகியதால், அப்பெண் திருமணம் செய்ய கூறி சதீஷ்குமாரை கேட்ட போது, சதீஷ்குமார் திருமணம் செய்ய மறுத்துள்ளார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட மேற்படி பெண் டபிள்யு-8 திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

டபிள்யு-8 திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார் தீவிர விசாரணை செய்து, மேற்படி பெண்ணை பாலியல் வன்புணர்ச்சி செய்து ஏமாற்றிய சதீஷ்குமார், வ/33, த/பெ.சாமிதுரை, அகில் பிளாக், சிபிடபிள்யுடி குடியிருப்பு, அண்ணா நகர், சென்னை என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சதீஸ்குமார் விசாரணைக்குப் பின்னர் 22.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# டாஸ்மாக் ஊழியர்களுக்கு ரூ.2 ஆயிரம் ஊதிய உயர்வு: சட்டசபையில் அமைச்சர் செந்தில்பாலாஜி அறிவிப்பு

சென்னை 24, ஏப்ரல் 2025: இந்த ஆண்டு புதிதாக 50 ஆயிரம் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று அமைச்சர் செந்தில்பாலாஜி அறிவித்துள்ளார்.

மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மானியக் கோரிக்கையின் போது அமைச்சர் செந்தில் பாலாஜி புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:

* மின்சார வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்கள் தேவைக்கேற்ப நிரப்பப்படும்

* தூத்துக்குடி மாவட்டத்தில் புதிதாக 600 மெகாவாட் அனல் மின் நிலையம் அமைக்கப்படும்.

* ரூ.57 கோடி மதிப்பீட்டில் மன்னார்குடி, மலைக்கோட்டை, சிதம்பரம், திருஉத்திரக் கோசமங்கை, திருவிடந்தை, சமயபுரம், மேல்மலையனூர், திருவிடைமருதூர், காளையார் கோவில் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள தேரோடும் வீதிகள் மற்றும் திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் செல்லும் மேல்நிலை மின் பாதைகள் புதைவடங்களாக மாற்றி அமைக்கப்படும்.

* ரூ.490 கோடி மதிப்பீட்டில் இயற்கை பேரிடர்களால் இன்னலுக்கு உட்படும் கடலோர நகரங்களான கடலூர் மற்றும் நாகப்பட்டினத்தில் மேல்நிலை மின் பாதைகள் புதைவடங்களாக மாற்றப்படும்

* ரூ.500 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி அனல் மின் நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம் 1, மேட்டூர் அனல் மின் நிலையம் 2, வட சென்னை அனல் மின் நிலையம்-1 மற்றும் வட சென்னை அனல் மின் நிலையம் - 2 ஆகியவற்றில் உள்ள பல்வேறு உபகரணங்களில் மூலதனப் பணிகள் மேற்கொள்ளப்படும். ரூ.111 கோடி மதிப்பீட்டில் வழுதூர் எரிவாயு மின் நிலையம் சீரமைக்கப்படும்.

* தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தால் இந்த ஆண்டில் 50 ஆயிரம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும்.

* ரூ.1,192 கோடி மதிப்பீட்டில், 12 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். மின்சார ஊழியர்களின் பாதுகாப்பிற்காக சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும். இவ்வாறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

# தேசிய பஞ்சாயத்து ராஜ் தினமான ஏப்ரல் 24 அன்று பீகாரின் மதுபானியிலிருந்து நாடு முழுவதும் உள்ள கிராமசபைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றவுள்ளார்

சென்னை 24, ஏப்ரல் 2025: ஊரக உள்ளாட்சி அமைப்புகளான பஞ்சாயத்துகளுக்கு அரசியல் சட்டரீதியான அந்தஸ்து 73-வது அரசியல் திருத்த சட்டம் 1992-இன் மூலம் வழங்கப்பட்ட 32-வது ஆண்டினை குறிக்கும் வகையில் 2025 ஏப்ரல் 24 அன்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தை நாடு கடைப்பிடித்து வருகிறது. இதற்கான முதன்மை நிகழ்வு பீகாரின் மதுபானி மாவட்டத்தில் உள்ள ஜான்ஜஹார்பூர் ஒன்றியத்தின் லோஹ்னா உத்தர் கிராம பஞ்சாயத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் நடைபெறவுள்ளது. இந்தநிகழ்வில் நாடு முழுவதும் உள்ள கிராமசபைகள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு உரையாற்றவுள்ள பிரதமர், சிறப்புப் பிரிவு தேசிய பஞ்சாயத்து விருதுகள் 2025-ஐயும் வழங்கவுள்ளார்.

இந்த ஆண்டு பஞ்சாயத்து ராஜ் தினம்" ஒட்டுமொத்த அரசு "என்ற அணுகுமுறை மூலம் மாபெரும் தேசிய நிகழ்வாக நடத்தப்படவுள்ளது. இதில் மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், மின்சார அமைச்சகம், ரயில்வே அமைச்சகம், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ஆகியவை பங்கேற்கவுள்ளன. இந்த அமைச்சகங்களுடன் தொடர்புடைய பல முக்கியமான உள்கட்டமைப்பு மற்றும் நல்வாழ்வு திட்டங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி அடிக்கல் நாட்டுவதுடன், நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து வைப்பார். சுமார் 13,500 கோடி மதிப்பிலான சமையல் எரிவாயுவை சிலிண்டரில் நிரப்பும் தொழிற்சாலைகள், மின்மயமாக்கல் திட்டங்கள், வீட்டுவசதி திட்டங்கள், ரயில்வே உள்கட்டமைப்பு, சாலை மேம்பாடு ஆகியவை இதில் அடங்கும். இந்த நிகழ்வின் போது பிரதமரின் ஊரக மற்றும் நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் நிதியுதவியும் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் பீகார் முதலமைச்சர் திரு நிதீஷ் குமார், மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங், பீகார் துணை முதலமைச்சர்கள் திரு சாம்ராட் சௌத்ரி, விஜய்குமார் சின்ஹா உள்ளிட்டோர் பங்கேற்பார்கள்.

# உலகளாவிய சுகாதார சமத்துவத்தில் முக்கிய பங்கு வகிப்பதாக பாரம்பரிய மருத்துவத்தை முன்னிறுத்துவதற்கான உலக சுகாதார உச்சி மாநாட்டின் பிராந்தியக் கூட்டம் 2025

சென்னை 24, ஏப்ரல் 2025: புதுதில்லியில் 2025 ஏப்ரல் 25 முதல் 27 வரை நடைபெறவுள்ள உலக சுகாதார உச்சி மாநாடு பிராந்தியக் கூட்டம், பாரம்பரிய மருத்துவ முறைகளை ஒருங்கிணைப்பதிலும் அளவிடுவதிலும் சிறப்பு கவனம் செலுத்தி, உலகளாவிய சுகாதார நிகழ்ச்சி நிரலை வடிவமைப்பதற்கான ஒரு முக்கிய தளத்தை வழங்க உள்ளது. உச்சிமாநாட்டின் சிறப்பம்சங்களில், "சமநிலையை மீட்டெடுத்தல்: உடல்நலம் மற்றும் நல்வாழ்வுக்கான பாரம்பரிய மருத்துவத்திற்கான அணுகலை அளவிடுதல்" என்ற தலைப்பில் ஓர் அமர்வு உள்ளது. இது உலகளாவிய பாரம்பரிய மருத்துவத் துறைக்கு ஒரு முக்கிய மைல்கல்லாக செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. "பாரம்பரிய மருத்துவம் குறித்த உலகளாவிய உரையாடலை முன்னெடுத்துச் செல்ல உலக சுகாதார உச்சிமாநாட்டின் பிராந்திய கூட்டம் சரியான நேரத்தில் கிடைத்துள்ள ஒரு வாய்ப்பாகும் என்று மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) திரு பிரதாப்ராவ் ஜாதவ் இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டி உள்ளார். இந்த அமர்வு முழுமையான ஆரோக்கியம் நோக்கி வளர்ந்து வரும் உலகளாவிய ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது. உலக சுகாதார அமைப்பின் 2-ஆவது சர்வதேச பாரம்பரிய மருத்துவ உச்சி மாநாட்டிற்கு நாம் தயாராகி வரும் நிலையில், உலகளாவிய நல்வாழ்வுக்கான தனது உறுதிப்பாட்டை இந்தியா மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்றும் அவர் கூறினார்.

அமைச்சர்கள், முன்னணி விஞ்ஞானிகள், தலைமை நிர்வாக அதிகாரிகள், ஐ.நா அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக பங்குதாரர்களை ஒன்றிணைத்து, "சுகாதார சமத்துவத்தை உறுதிப்படுத்தும் அணுகலை அளவிடுதல்" என்ற கருப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உலக சுகாதார உச்சிமாநாட்டின் பிராந்திய கூட்டம், அனைவருக்கும் ஆரோக்கியத்தை அடைவதற்கான புதுமையான, அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான பாதைகளை ஆராயும். பாரம்பரிய மருத்துவம் குறித்த அர்ப்பணிப்பு அமர்வு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த அமர்வானது பண்டைய ஞானத்தில் வேரூன்றிய முழுமையான சுகாதார அமைப்புகள் எவ்வாறு தனிநபரை மையமாகக் கொண்ட சுகாதார பராமரிப்பில் வளர்ந்து வரும் உலகளாவிய தேவையை பூர்த்தி செய்வதற்கும் சுகாதார சமத்துவத்திற்கு பங்களிப்பதற்கும் உதவும் என்பதை ஆராயும். தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள், சான்றுகள் அடிப்படையிலான ஆராய்ச்சி மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம் பாதுகாப்பான மற்றும் பயனுள்ள பாரம்பரிய மருத்துவ நடைமுறைகளுக்கு உலகளாவிய அணுகலை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை நிபுணர்கள் ஆராய்வார்கள். 2025 டிசம்பர் 2 முதல் 4 வரை புதுதில்லியில் நடைபெறவுள்ள 2வது உலக சுகாதார நிறுவன பாரம்பரிய மருத்துவ உலகளாவிய உச்சி மாநாட்டிற்கு முன்னதாக இந்த அமர்வு பொருத்தமானதாக இருக்கும்.

# பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் முன்னணி நாடாக இந்தியா திகழ்கிறது

சென்னை 24, ஏப்ரல் 2025: இந்தியாவின் பொருளாதாரம் 2025-ம் ஆண்டில் 6.2% ஆகவும், 2026-ம் ஆண்டில் 6.3% ஆகவும் வளரும் என்று சர்வதேச செலாவணி நிதியம் கணித்துள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பொருளாதாரமாக இந்தியா இருக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் (ஐஎம்எஃப்) கணித்துள்ள நிலையில், உலகப் பொருளாதாரத்தை மீண்டும் வழிநடத்த இந்தியா தயாராக உள்ளது. சர்வதேச செலாவணி நிதியத்தின் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் ஏப்ரல் 2025 பதிப்பின்படி, இந்தியாவின் பொருளாதாரம் 2025-ம் ஆண்டில் 6.2 சதவீதமாகவும், 2026-ம் ஆண்டில் 6.3 சதவீதமாகவும் வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது உலகளாவிய சூழலில் உறுதியான நிலையாகும்.



உலகளாவிய வர்த்தக பதற்றங்கள் மற்றும் வளர்ந்து வரும் நிச்சயமற்ற தன்மைக்கு இடையிலும் இந்தியப் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி வலுவாகவே உள்ளது. இந்த நிலைத்தன்மை, இந்தியாவின் பேரியல் பொருளாதார அடிப்படைகளின் வலிமையை மட்டுமல்லாமல், சிக்கலான சர்வதேச சூழலில் வேகத்தை நிலைநிறுத்துவதற்கான அதன் திறனையும் குறிக்கிறது. இந்தியாவின் பொருளாதார நிலைத்தன்மையை சர்வதேச செலாவணி நிதியம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ள நிலையில், உலகளாவிய வளர்ச்சியின் முக்கிய உந்துதலாக நாட்டின் பங்கு தொடர்ந்து முக்கியத்துவம் பெற்று வருகிறது.

உலகப் பொருளாதார ஆய்வறிக்கை என்பது உலகளாவிய பொருளாதார போக்குகள் மற்றும் கொள்கை சவால்கள் குறித்த சர்வதேச செலாவணி நிதியத்தின் முக்கிய அறிக்கையாகும். இடைக்கால புதுப்பிப்புகளுடன் ஆண்டுக்கு இரண்டு முறை இது வெளியிடப்படுகிறது, இது வளர்ந்து வரும் மற்றும் வளரும் பொருளாதாரங்களை உள்ளடக்கிய கணிப்புகளை வழங்குகிறது.

ஏப்ரல் 2025 வெளியீட்டில், இந்தியாவைப் பொறுத்த வரை, வளர்ச்சிக் கண்ணோட்டம் ஒப்பீட்டளவில் மிகவும் நிலையானது என குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச செலாவணி நிதியம் இந்திய பொருளாதாரத்தில் நிலையான வளர்ச்சியைக் கணித்துள்ளது.

சர்வதேச செலாவணி நிதியம் மற்ற முக்கிய உலகளாவிய பொருளாதாரங்களுக்கான வளர்ச்சி மதிப்பீடுகளையும் வெளியிட்டுள்ளது. 2025-ம் ஆண்டிற்கான சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி கணிப்பு 4.0 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது உலக பொருளாதார கண்ணோட்டத்தின் ஜனவரி 2025 பதிப்பில் 4.6 சதவீதமாக இருந்தது. இதேபோல், அமெரிக்காவின் வளர்ச்சி 90 அடிப்படை புள்ளிகள் குறைந்து 1.8 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்ற நாடுகளை பொறுத்த வரை இந்த மாற்றங்கள் இருந்த போதிலும், இந்தியா வலுவான வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து பயணிக்கிறது.

# வெடிமருந்து மற்றும் தளவாடங்களை ஏற்றிச் செல்லும் 10-வது ஏவுகணைப் படகு, எல்எஸ்ஏஎம் 24 (யார்டு 134) பணியில் ஈடுபடுத்தப்பட்டது

சென்னை 24, ஏப்ரல் 2025: வெடிமருந்து மற்றும் தளவாடங்களை ஏற்றிச் செல்லும் 10-வது ஏவுகணைப் படகு, எல்எஸ்ஏஎம் 24 (யார்டு 134) பணியில் ஈடுபடுத்தப்பட்டது.

10-வது நீருக்கடியில் இருந்து செலுத்தக் கூடிய ஏவுகணையுடன் கூடிய படகு ஏப்ரல் 22-ம் தேதி மும்பையில் உள்ள கடற்படை தளத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. இந்த விழாவிற்கு தலைமை விருந்தினராக கமாண்டர் ஏ.கே.கே.ரெட்டி கலந்துகொண்டார்.

தானேவில் உள்ள சூர்யதீப்தா ப்ராஜெக்ட்ஸ் என்ற தனியார் நிறுவனத்துடன் வெடிமருந்துகள் மற்றும் நீருக்கடியிலிருந்து செலுத்தக் கூடிய ஏவுகணை வசதியுடன் கூடிய 11 படகுகளை தயாரித்து வழங்குவதற்கான ஒப்பந்தம் 2021-ம் ஆண்டு மார்ச் 5-ம் தேதி முடிவு செய்யப்பட்டது. இந்த கப்பல் கட்டுமான தளத்தில் இந்திய கப்பல் வடிவமைப்பு நிறுவனத்துடன் இணைந்து இந்த ரக படகுகள் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டன. பின்னர் விசாகப் பட்டினத்தில் உள்ள கடற்படை அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஆய்வகத்தில் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டு கடலில் பயன்படுத்தக் கூடிய தகுதி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் படகுகள் இந்திய கப்பல் பதிவேட்டின் (ஐஆர்எஸ்) தொடர்புடைய கடற்படை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப கட்டப்பட்டுள்ளன. இந்தப் படகுகள் மத்திய அரசின் "இந்தியாவில் உற்பத்தி செய்வோம்" மற்றும் "தற்சார்பு இந்தியா" போன்ற முன்னோடி திட்டங்களின் முன் முயற்சியாக அமைந்துள்ளது. ஒன்பது நீருக்கடியில் இருந்து செலுத்தக் கூடிய ஏவுகணையுடன் கூடிய படகுகள் ஏற்கனவே பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. மேலும் கப்பல் கட்டும் தளத்திற்கு நான்கு சுல்லேஜ் படகுகளை நிர்மாணித்து இந்திய கடற்படைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தமும் வழங்கப்பட்டுள்ளது, இந்த நடவடிக்கையானது குறு, சிறு நடுத்தர நிறுவனங்களை ஊக்குவிப்பதில் இந்திய கடற்படையின் உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.